2. வினாக்கள்—விடைகள்

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள். வினா வரிசை எண் 211, மாண்புமிகு உறுப்பினர் திரு. பொ. அர்ஜுனன், மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

211—

வருவாய் ஆய்வாளர் அலுவலகக் கட்டடம்

***26717—திரு. பொ. அர்ஜுனன்:**

மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டிவனம் தொகுதி, ஒலக்கூரில் உள்ள வருவாய் ஆய்வாளர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் வட்டம், ஒலக்கூர் கிராமத்தில் ஒலக்கூர் குறுவட்ட வருவாய் ஆய்வாளர் அலுவலகக் கட்டடம் கட்டுவது தொடர்பான கருத்துரு அரசளவில் ஏதும் நிலுவையில் இல்லை. மேற்படி கட்டடம் கட்டுவது தொடர்பாக உரிய மதிப்பீட்டு அறிக்கை பொதுப் பணித் துறையிலிருந்து பெறப்பட்டு, கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையரிடமிருந்து கருத்துரு பெறப்படும்போது மேல்நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பொ. அர்ஜுனன் அவர்கள்.*

திரு. பொ. அர்ஜுனன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கழகப் பொதுச் செயலாளர் ஐயா எடப்பாடியார்*

2023 அக்டோபர் 10]

அவர்களை வணங்குகிறேன். என்னுடைய திண்டிவனம் தொகுதி, ஒலக்கூரிலுள்ள வருவாய் ஆய்வாளர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது ஒலக்கூரில் இருக்கிற RI அலுவலகம் முழுவதுமாகப் பழுதடைந்துள்ளது. தற்போது பக்கத்தில் இருக்கிற VAO அலுவலகத்தில்தான் அந்த RI அலுவலகம் இயங்கிக் கொண்டிருக்கிறது. ஆகவே, இந்த ஆண்டிலே அதற்கு முன்னுரிமை கொடுத்து ஒலக்கூரிலேயே RI அலுவலகம் கட்டுவதற்கு வேண்டிய முயற்சிகளை அரசு எடுக்கும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பொ. அர்ஜூனன் அவர்கள்.*

திரு. பொ. அர்ஜூனன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டிவனம் தாலுகா, ஒலக்கூர் மற்றும் மரக்காணம் தாலுகா, பிரம்மதேசம் ஆகிய பகுதிகளில் வருவாய் ஆய்வாளர் அலுவலகம் மற்றும் குடியிருப்புகள் சேதமடைந்து பயன்படுத்த இயலாத நிலை இருக்கிறது. அங்கு புதிய வருவாய் ஆய்வாளர் அலுவலகம் மற்றும் குடியிருப்புக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், ஏந்தூர், முன்னூர், ஆலங்குப்பம், கந்தாடு, அசப்பூர் ஆகிய இடங்களில் கிராம நிருவாக அலுவலகக் கட்டடம் இல்லாமல் உள்ளது. அங்கே புதிய கிராம நிருவாக அலுவலகம் கட்ட அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் 2022–2023 ஆம் ஆண்டு மானியக் கோரிக்கை விவாதத்தின்போது, திண்டிவனம் வட்டாட்சியர் அலுவலகம் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளது; மழைக் காலங்களில் ஒழுகும் நிலையில் உள்ளது; எனவே, அதற்குப் புதிய கட்டடம் கட்டித் தர வேண்டுமென்று கோரிக்கை வைத்தேன். மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பதாகக் கூறினார்கள். ஆனால் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. எனவே, புதிய வட்டாட்சியர் அலுவலகக் கட்டடம் கட்ட ஆவன செய்யுமாறு தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் இருக்கிற RDO அலுவலகங்கள், தாலுகா அலுவலகங்கள், RI அலுவலகங்கள், VAO அலுவலகங்கள் என எவையெல்லாம் பழுதுபட்டு இருக்கின்றனவோ, அவற்றையெல்லாம் கணக்கெடுத்து அரசாங்கத்திற்கு அனுப்பச் சொல்லி மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு நாங்கள் கடிதம் அனுப்பியிருக்கிறோம். அவற்றிலே மிக மோசமாக இருக்கின்றவற்றிற்கு இந்த ஆண்டு முன்னுரிமை கொடுத்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் கலந்துகொண்டு நிச்சயமாக அதற்கு வேண்டிய முன்னெடுப்புப் பணிகளை நிச்சயமாகச் செய்வேன்.

முற்பகல் 10–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன் அவர்கள்.

திரு. க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்விக்குத் தொடர்பில்லாவிட்டாலுங்கூட, நீண்ட நாட்களாக இருக்கிற பட்டா வழங்குகிற செய்தியைப் பதிவு செய்ய வேண்டுமென்பதற்காகக் கேட்கிறேன். தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் சட்டமன்றத் தொகுதி, திருநாகேஸ்வரம் பேரூராட்சிக்குட்பட்ட சன்னபுரம் மற்றும் அணக்குடி ஆகிய கிராமங்களில் 3 தலைமுறைகளுக்கும் மேலாக சுமார் 2,000 பொதுமக்கள் வாழ்ந்து வருகின்றனர். வருவாய் ஆவணங்கள் ESR, UDR ஆகியவற்றில் உள்ள குடியிருப்புகளின் நிலைப்பாடு குறித்து ஏற்பட்ட தவறுகளை நீக்கி, OSR பதிவேட்டின்படி, மேற்கண்ட இடங்கள் குறித்து ஒட்டுமொத்த கிராமங்களையும் மறுஅளவீடு செய்திட வேண்டும். குடியிருப்புப் பகுதிகளாக இருந்தவற்றை எவ்வித ஆதாரமுமின்றி கோயில் நிலங்களாக வகைப்பாடு செய்து பதிவேட்டில் தவறுதலாகப் பதிவேற்றம் செய்ததால், அறநிலையத் துறையால் அந்தப் பகுதி மக்கள் பெரும் பாதிப்படைந்திருக்கிறார்கள். பொதுமக்களுடைய 60 வருட கோரிக்கையினை அரசு ஏற்று மாண்பிற்கினிய முதலமைச்சர் அவர்கள் இதுகுறித்து சமீபத்தில் நடந்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டிலும்கூட பட்டா வழங்குவதில் விரைவாக கவனம் செலுத்த வேண்டுமென்று

2023 அக்டோபர் 10]

சொல்லியிருக்கிறார்கள். அந்த வகையில் மாண்பிற்கினிய அமைச்சர் அவர்கள் அந்தப் பகுதி மக்களுக்குப் பட்டா வழங்கும் நிகழ்ச்சியை செய்து கொடுப்பார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர் இதுகுறித்து என்னிடம் பேசியிருக்கிறார். இதுபோன்று பல சட்டமன்ற உறுப்பினர்கள் அவர்களுடைய பகுதியிலே பட்டா வழங்க வேண்டுமென்று என் மத்தியிலே கோரிக்கை வைத்திருக்கிறார்கள். இவற்றையெல்லாம் பரிசீலனை செய்து தகுந்த நடவடிக்கையை நிச்சயமாக நம்முடைய அரசாங்கம் எடுக்கும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 212, மாண்புமிகு உறுப்பினர் திரு. காதர்பாட்சா முத்துராமலிங்கம், மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

212—

அடுக்குமாடிக் குடியிருப்புகள்

***51190—திரு. காதர்பாட்சா முத்துராமலிங்கம்:**

மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் தொகுதியில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

இராமநாதபுரம் தொகுதியில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்குச் சொந்தமான நிலம் ஏதுமில்லை. எனவே, புதிதாக அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டுகிற திட்டம் தற்போது இல்லை.